விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 சித்திரை 28 றம்ழான் 12 இதழ் 81

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 11-5-1987

● லீவு மறுக்கப்பட்ட

## பலாலி முகாம் சிப்பாய் புலிகளிடம் வந்து சரண்!

யாழ்ப்பாணம், திங்கள் பலாலி இராணுவமுகாம் சிப்பாய் ஒருவர் முகாமிலிருந்து தப்பிவந்து தமிழீழ விடுதலைப்புலிகளிடம் நேற்றுக் காலை சரணடைந்துள்ளார்.

பிரஸ்தாப சிப்பாய் விடுமுறைக்குத் தனதுசொந்த ஊருக்குச் செல்வதற்காக முகாம் உயரதிகாரிகளிடம் லீவு கோரியிருந்தார்.

ஆனால் இந்த இராணுவ சிப்பாயின்லீவு உயரதிகாரிளால் மறுக்கப்பட்டதுடன், துன்புறுத்தல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் அந்த சிப்பாய் உள்ளாக்கப்பட்டாராம்.

இதனையடுத்து இரவோடிரவாக சாரத்துடனும், சேட்டுடனும் முகாமிலிருந்து தப்பி வெளியேறியதாக இவர் புலிகளிடம் தெரிவித்துள்ளார்.

முகாமிலிருந்து தப்பிவந்த இந்த இராணுவ சிப்பாயை சுன்னாகத்தில் வைத்து நேற்றுக்காலை பொதுமக்கள் பிடித்தபோது தனக்கு முகாமில் நடந்த சித்திரவதைகளைக் கூறித் தன்னைப் புலிகளிடம்

5-ம் பக்கம் பார்க்க

● போர்தவிர்ப்புப் பிராந்தியம்: ‘வெசாக்தின’இறுதிக்குள்

# தமிழ்ப் போராளிகள் முடிவை அரசு எதிர்பார்க்கின்றது!

## கொத்தலாவல சந்திப்பு குறித்து புலிகள் ஆலோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நகரச் சுற்றுடலில் ‘போர் தவிர்ப்புப்’ பிராந்தியமொன்றை ஏற்படுத்துவதற்கான முடிவை எடுப்பதற்கு எதிர்வரும் ‘வெசாக் பண்டிகைத் தினம்வரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் இன்று திங்கட்கிழமை காப்டன் கொத்தலாவலவுடன் போர் தவிர்ப்புப் பிராந்தியம்பற்றிப் பேசுவது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை எதுவித முடிவையும் எடுக்கவில்லை.

இன்று திங்கட்கிழமை அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியான காப்டன் கொத்தலாவலவுடன் தமிழ்ப்போராளிகள் போர்தவிர்ப்புப் பிராந்தியம் குறித்து பரிசீலனை செய்வர் எனத தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் காப்டன் கொத்தலாவலவுடனான சந்திப்புக் குறித்து நேற்று நள்ளிரவுவரை எதுவித முடிவுக்கும் வரவில்லை. அச்சந்திப்பை நிராகரித்தோ அல்லது ஏற்றுக் கொண்டதோ பற்றியும் அவர்கள் எதனையும் அறிவிக்கவில்லை.

அரசாங்க வட்டாரங்கள் யாழ் வைத்தியசாலை உயர்மட்டம் மூலமாக போராளிகள் குழுக்களுக்கு போர் தவிர்ப்புப் பிராந்தியம் குறித்த பேச்சுக்களை மேற்கொள்ள முன்வந்திருந்தது.

இதேவேளை எதிர்வரும் ‘வெசாக தினம்’ வரை தமிழ்ப்

(5-ம் பக்கம் பார்க்க)

இலங்கையில்

## பாதுகாப்புச் செலவின அதிகரிப்பு நிதிஉலக நிறுவனங்கள் அதிருப்தி!

லண்டன், மே- ! இலங்கையில் அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவினங்களையிட்டு, இலங்கைக்கு நிதியுதவிவழங்கும பிரதான சர்வதேச நிறுவனங்களான உலக வங்கியும், சர்வதேச நாயண நிதியமும் அதிருப்தி கொண்டுள்ளன

இதனால் 87-88 ம் ஆண்டுகளுக்கான இந்நிறுவனங்களின் உதவியைப் பெறுவதில் இலங்கை பெரு சிரமத்தை

(5-ம் பக்கம் பார்க்க)

இடமாற்றம்

வாடிக்கையாளரின் பாதுகாப்பை
முன்னிட்டு
தற்காலிக இடமாற்றம்

‘சீமாட்டி ஜவுளி சமுத்திரம்’’
“சீமாட்டி பான்ஸி குட்ஸ்’’

மலிவு விற்பனை:

சுமங்கலி

531, பலாலி வீதி,
(யாழ். பல்கலைக்கழகம் அருகாமையில்)
திருநெல்வேலி.

கிளை:- சுன்னாகம்.

[சி-8990]

இந்தியாவில்

## தமிழ் போராளிகள் பயிற்சிபெறவில்லை

வாஷிங்டன், மே, 10 இலங்கைத் தமிழ்ப் போராளிகளுக்கு இந்தியப் பிராந்தியத்தல் பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக ‘வாஷிங்டன் போஸ்ட்’ நாளேட்டில் வெளியான குற்றச்சாட்டை வாஷிங்


5-ம் பக்கம் பார்க்க]

## 25 விதவைப் பெண்களுக்கு தையல் மெஷின்கள்

யாழ்ப்பாணம், திங்கள் இராணுவ வன்செயல்களினால் தம் கணவன்மாரை இழந்த 25 விதவைப் பெண்களுக்குத் தையல் மெஷின்களை நாளை மறுதினம் புதன்கிழமை காலை ‘அகதிகள் புனர்வாழ்வு

(5-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் காமினி சென்னை பயணம்



கொழும்பு, ஞாயிறு காணிகாணிஅபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்க இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக தமிழ் தலைவர்களுடன் பேச்சு நடத்தும் பொருட்டு நேற்றிரவு சென்னைக்கு பயணமானார். (ஒ)

வேம்படி, மத்திய கல்லூரிகள்

## தொடர்ந்து நடத்துவதுபற்றி முடிவு எடுக்கக் கோரிக்கை

(மு. வாமதேவன்)

“யாழ்ப்பாணம் வேம்படிமகளிர் கல்லூரி, மத்தியகல்லூரி ஆகியவற்றை தொடர்ந்து நடத்துவது குறித்து கூடிய விரைவில் முடிவொன்று எடுக்கப்பட வேண்டும்’’ என்று யாழ்ப்பாணம் கல்விப்பணிப் பணிப்பாளர் ஜனப் எம்.என். மன்சூர் தெரிவித்துள்ளார்.

கடந்த 5ந் திகதி இரண்டாந் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்நகரில் கோட்டை முகாமுக்கு அருகிலுள்ள இவ்விரு பிரதான பாடசாலைகளும் போதியளவு பாதுகாப்பின்மையால் தொடர்ந்து சீராகஇயங்கமுடியாத நிலையிலுள்ளன.

இவ்விரு பாடசாலைகளிலும் க. பொ. த. சாதாரணதரம், உயர்தரம் ஆகியவற்றைச் சேர்ந்த நூற்றுக்கணக்

(5-ம் பக்கம் பார்க்க)

## மாணவன் ரணவக்க மரணத்துக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், திங் மேதினத்திலன்று கொழும்பு நாரஹென்பிட்டியாவில் பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்ட ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் கீத்சிறி மேவன்

(5-ம் பககம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புறொய்லர் கோழி [சிறியது] பிலிமௌத் கறுப்பு சேவல், விருத்து சேவல் முதலியனவிற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். சி-9008

நல்ல இன வளர்ப்பு மீன்கள் (Angel Goldfish உட்பட) விற்பனைக்கு உண்டு. இரத்தின வாசா, கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு, (பழைய புகையிரத வீதி . (சி 9020)

நீண்ட நாட்களுக்குப் பின் புதிதாக இறக்குமதி செய்யப்பட்டலிப்கோவின்தமிழ்தமிழ்-ஆங்கில அகராதி விறபனையாகின்றன. விலை ரூபா 105/- சொற்ப பிரதிகள் உள்ளன. விற்பனைக்கு:பூபாலசிங்கம் புத்தகசாலை, புத்தகக் களஞ்சியம், 15/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். சி-8816

Indra Aqua Live Fish Garden உயரின வளர்ப்பு மீன்கள் மீண்டும் வரவழைக்கப்பட்டு துரிதமாக விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது.A.C. இராஜக்கோன், 28, மத்திய மேற்கு வீதி, குருநகர், [St. ஜேம்ஸ் ஆண் பாடசாலை அருகாமை வீதி, குருநகர் [சி 8980]

National S 1 வீடியோ மிக்ஷர், J. V. C GXN 70 E வீடியோ கமெரா, Orien Portable வீடியோ டெக், Sony அம்பிளிவயர், Floor Polisher, Electric Cooker, சிங்கர் தையல் மெசின் (எலக்ரிக்) மற்றும் பல வீட்டுப் பாவனைப் பொருட்கள் விற்பனைக்குண்டு. 45, பழம்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். சி-8953

எங்களிடம் எந்நேரமும் சுபமுகூர்த்தங்களுக்கு உரிய பட்டு புடவைகளும் மற்றும் சகல வைபவங்களுக்கேற்ற புடவை வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். கணேசன் ஸ்ரோர்ஸ், இல. 11, கஸ்தூரியர் ஒழுங்கை, கஸ்தூரியர் ரோட், யாழ்ப்பாணம். ஏ-3980

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்த நாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள; அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001. ¢ 8001

பாவித்த வீட்டுப் பாவனைப் பொருட்கள் தளபாடங்கள், அல்மாரி, கட்டில் மெத்தைகள், பித்தளை சில்வர் பொருட்கள், Baby Cot, மேசைகள், பெல்ஜியம் கண்ணுடிகள், Show Case, கதிரைகள், மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். சென்பற்றிக் சந்தியருகில். (-சி8938)

கோவில் பூசைப் பொருள்கள், எவர்சில்வர், பித்தளை, அலுமெனியம்,செம்பு, வீட்டுப் பாவனைப் பாத்திரங்கள், குத்து விளக்குகள், திருவாசி,கோவில் பட்டுக் குடை, பித்தளை, அலுமெனிய வார்ப்பு வேலைகள், முலாம் பூசுதல் (Plating), (வெற்மின்) கால் நடைக்கான கனி உப்புக் கலவை மற்றும் உங்கள் சகல தேவைகளுக்கும்: புதிய அகம், சிவன் மாளிகை லிமிட்டெட், மாரி அம்மன் ஒழுங்கை, திருநெல்வேலி சிவன் அம்மன் கோவிலுக்கு அண்மையில், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [சி-8974]

## தேவை

விவசாய உத்தியோகத்தர் தேவை. முழு விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். முகவரி:- செயலாளர், ஊற்று நிறுவனம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [சி-8959]

பயிற்றப்பட்ட தாதிகள் தேவை. நேரில் வரவும்: சென்றல் நேசிங் ஹோம், 350, பலாலி வீதி, திருநெல்வேலி. [சி-8977]

## பயிற்சி

Computer Programming ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங், எலக்றிக்கல் வைன்டிங், வயறிங் பயிற்சிகள் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் குறைந்த கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 15-05-87. விபரங்களிற்கு: Jaffna Technical Institute, யாழ் வீதி [பாமஸி அருகாமை], மானிப்பாய். [சி 9007]

## மணப்பந்தல்

எம்மிடம் எல்லாச்சாதி சமயத்திலும் டொக்டர் தொடக்கம் கமக்காரர்வரை மணமக்கள் இருக்கிறார்கள். விண்ணப்பிக்கவும் ஞாயிற்றுக் கிழமையில் நேரில்வரவும் மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். சி-8872

## 45-வது நாள் நினைவஞ்சலி



செல்வி தமிழரசி நவரத்தினம்
உலகின் மடியில்: 9- 11- 1973
தியாகத்தீயில்: 28- 3- 1987

எருமையிலே யமன் வந்து உயிர்பறிப்பான் என்பார், அருமைமிகு உறவினர்கள் தொண்டாற்ற விடுவான் தமிழரசி ஒருவார்த்தை பேசவும் விடாதே கொடுங்காலன் 'பொம்ம'ரிலே குண்டுஉருவில் வந்தான் நொடிப் பொழுதில் எமைவிட்டு நீ பிரிந்தாய் கண்ணே; உன்குறும்பு உன்நடனம் உன்பாட்டு எல்லாம் என்றுதான் நாம் காண்போம் தமிழரசீ! நீவா எம் தமிழர் உயிர் குடிக்கும் கொடுங்காலன் துடிக்கச் செயல்புரிய நீ மீண்டும் எம்குடியில் பிறப்பாய் எம்முள்ளம் சாந்திபெற மீண்டிங்கு வாராய்!

பெற்றோர், சகோதர சகோதரிகள்.
செல்லர் நவரத்தினம்,
60, சிவன் புதியவீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(சி- 9021)

## வகுப்புக்கள்

வெளிநாடு உள்நாடு வேலை தேடிச் செல்பவர்கட்கு ஓர் அரிய சந்தர்ப்பம். தொழில் நுட்பக் கல்வி பயிற்சியுடன் ஆரம்பமாகின்றது. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் தொடர்பு; Vispa Engineering aid Hall, (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில்), 328, நாவலர் ரோட், யாழ்ம்பாணம்.
(சி 9023)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



த. பொன்னம்பலம்
(இளைப்பாறிய பாதுகாப்பு ஊழியர்)
தோற்றம்: 24- 1- 1924
மறைவு: 11- 4- 87

எமது அன்புத் தெய்வமே உங்களை இழந்த நாம் அடியற்ற மரம் போலவும் வேரிழந்த மரமாகவும் நிலையிழந்து நிற்கிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்,
மனைவி, பிள்ளைகள்.
உடுப்பிட்டி.
[சி- 8987]

## நினைவு ஆண்டிரண்டு

நற்செயல் புரிந்தவர் நாளும் வாழ்வர்.
Deeds Live Eternally



வேலணை
திருமதி உருக்குமணி இராசரத்தினம்
(இளைப்பாறிய ஆசிரியை)
மலர்வு: 15- 06- 1914
நிறைவு: 02- 05- 1985
திதி: 11- 05- 1987

ஆண்டிரண்டாய் ஓய்வெடுத்தீர் அமர வாழ்வில்
அநுதினமுஞ் செய்து வந்த நன்றியெல்லாம்
வேண்டியபோதூர் மக்கள் விதந்துகூற
வேதனையால் வாழ்க்கையிலே விரக்தியானோம்
மாண்டவர்கள் பற்றிய நூல் வரலாறெல்லாம்
மயக்கமம்மா
உருக்குமணி பூலோகத்தில்
மீண்டுமொரு கால்வந்து குடும்பத்தோடு
மேலுமிணைந்
தேவாழ விழைகின்றோமே!

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.
(சி-9002)

## தவறிவிட்டது

கடந்த 08-05-1987 அன்று கோவில் திருப்பணிக்காக பொருட்கள் வாங்குவதற்காகக் கொண்டுசென்ற பணம் ரூபா 10,000 வின்சர் சந்திக்கும் மஸ்கன் ஸ்தாபனத்திற்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். வ. மூ தேவதாசன், வேதரடைப்பு, காரைநகர். [சி 9006]

## தவறிவிட்டது

சண்முகம் கனகசபாபதி இல. 482902901V என்பவருடைய அடையாள அட்டை 09-05-1987 இல் மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. இதை கண்டெடுத்தவர்கள் 99/3, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [சி 9025)

## முக்கிய அறிவித்தல்

யாழ். நகரில் தற்போது நிலவிவரும் சூழ்நிலை காரணமாக, பொதுமக்களின் நன்மை கருதி எமது ஸ்தாபனம் கீழ்க்காணும் இடத்திலும் இயங்கிவருகிறது. சகல பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் இந்த விலாசத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி**
34, ஆடியபாதம் வீதி
(நல்லூர் சந்தையிலிருந்து 100 யார் தூரத்தில்)
கல்வியங்காடு.

**எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி**
53, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ 3991)

### மாவட்ட அமைச்சு - மன்னார்.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

மன்னார் மாவட்ட அமைச்சின் கேள்விச்சபைத் தலைவரால் ரூபா 300,000/- மேல்பதிவு செய்யப்பபட்ட அரசாங்க கூட்டுத்தாபனக் கட்டிட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் மேற்படி தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட சங்கங்களிடமிருந்தும் பின்வரும் வேலைக்கான முத்திரை இடப்பட்ட கேள்வி இத்தால் கோரப்படுகின்றது.

கேள்வி விண்ணப்பங்கள் மாவட்ட அமைச்சினல் வழங்கப்படும் கேள்விப்படிவங்களிலேயே அனுப்பப்படல்வேண்டும்.

கேள்விப்படிவங்களை மாவட்டச் செயலகத்தின் திட்டமிடற் கிளையிலிருந்து மீளளிக்கமுடியாத கேள்விப் பத்திரப்பணமாக ரூபா 200/-ம், மீளளிக்கக்கூடிய கேள்விவைப்புப்பணமாக ரூபா 2000/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் 27-05-87 திகதிக்கு முன்பதாகச் "செயலாளர் மாவட்ட அமைச்சு, திட்டமிடற் கிளை, மன்னார்" என்ற விலாசத்திற்குப் பதிவஞ்சல் மூலம் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படவேண்டும். அல்லது இதற்கெனத் திட்டமிடற்கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் அன்றைய தினம் நண்பகல் 12மணிக்குமுன் இடுதல் வேண்டும்.

கேள்விப்பத்திரக் கடிதத்தின் இடதுபக்க மூலையில் "பதவிநிலை உத்தியோகத்தர் தனியாள் வதிவில்லம் அமைத்தற்கான கேள்வி" எனக்குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 18-05-87 முதல் 22-05-87 திகதி நண்பகல் 12மணிவரை வழங்கப்படும்.

கேள்விகள் 27-05-87ந் திகதி பிற்பகல் 2-30 மணிச்கு செயலாளர் அறையில் பரீசீலிக்கப்படும். அந்நேரத்தில் கேள்விக்காரரோ அவரது அங்கீகாரக் கடிதம் பெற்ற பிரதிநிதியோ நேரில் சமுகமளிக்க அனுமதி அளிக்கப்படும்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விக்காரர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட 7 நாட்களுக்குள் பிணைப்பணம் செலுத்தி வேலையைத்தொடங்கிக் குறித்த காலத்துக்குள் வேலையை முடித்து ஒப்படைக்கத் தயாராக இருக்கவேணடும்.

எந்த ஒரு கேள்வியை ஏற்கவோ நிராகரிக்கவோ, கேள்விப்பத்திரங்களை வழங்காது விடுவதற்கோ மாவட்டச் செயலாளருக்குப் பூரண அதிகாரமுண்டு.

### வேலையின் விபரம்

"பதவிநிலை உத்தியோகத்தர் தனியாள் வதிவில்லம் அமைத்தல், மன்னார்."

மேலதிக விபரங்களை மன்னார் மாவட்டச் செயலகத்தின் திட்டமிடற் கிளையிலிருந்து அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளமுடியும்.

**ஜனுப் எம். எம். மக்பூல்**
மன்னார் மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபரும்.

மாவட்ட அமைச்சு,
மன்னார்.
[எ-3990]

**மணிவாக்கு**

உனது அமைதியைப் புரிந்துகொள்ளாதவன் உனது வார்த்தைகளையும் புரிந்துகொள்ள முடியாதவனே!

—எல்பேர்ட் அப்பார்ட்

## நமது நோக்கு

# ஆஸ்பத்திரி தொடர்ந்து இயங்க வழிபிறக்கட்டும்!

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி அமைந்துள்ள பகுதியை அமைதிப்பிரதேசமாகப் பராமரிப்பதற்கான இருதரப்பு ஆலோசனைகள் இன்றையதினம் நடைபெறவிருப்பதாக வெளிவந்துள்ள செய்தி இப்பிரதேச மக்களைப் பொறுத்தவரை மிகுந்த உற்சாகமளிப்பதாகவும் நம்பிக்கையளிப்பதாகவும் இருக்கின்றது என்பதைச் சொல்லத்தேவையில்லை.

ஏற்கனவேயும் இம்மாதிரி முயற்சிகள் இடம்பெற்றுள்ளன ஆனால் அவைவெறும் அறிவிப்புகளாக மட்டுமே இருந்தன. பயன் ஏதும் ஏற்படவில்லை. இப்பொழுது போராளிகளுக்கும் ராணுவத்தினருக்குமிடையில் இவ்வாலோசனைகள் நடைபெறவிருப்பதால் அமைதிப்பிரதேசமாகப் பராமரிக்கப்படவேண்டிய இடங்கள் உறுதிப் படுத்தப்படமுடியும். தவிர்க்கமுடியாதநிலையிலும் கூட அப்பிரதேசத்தின் அமைதிக்கு பங்கம் ஏற்படாதமுறையில் இருதரப்புமே நடந்துகொள்வதற்கு எத்தனிக்கமுடியும்

பொதுவில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை இப்பிரதேச மக்களுக்கே உரிய ஒரு பொதுஸ்தாபனம், இங்கே நோயாளிஎன வரும் ஒவ்வொருவரும் சிகிச்சைக்குரியவரே, ஆபத்தான நிலையில் வரும் ஒருவரை சாதி, இனம், மொழி, மதம் வய வித்தியாசம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இன்றைய ஆபத்தான சூழ்நிலையில் வைத்தியர்களும், ஊழியர்களும் உயிர்களைக் காப்பாற்றுவதில் ஈடுபடுவார்களே தவிர பேராளிகளுக்கும் பொதுமக்களுக்குமிடையில் வித்தியாசம் தேடிக்கொண்டிருக்கமாட்டார்கள். எனவே இந்த ஆஸ்பத்திரி எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ அந்தநோக்கம் சகல விதத்திலும் செயல்படவேண்டும். அதற்கான சூழ்நிலைகளும் உருவாக்கப்படவேண்டும்.

இதுவிடயமாக கொழும்பிலுள்ள அதிகாரிகளோடும் அமைச்சர்களோடும் இங்கிருந்துசென்ற பிரமுகர்கள் குழு சுமுகமான முறையில் பேச்சுக்களைநடத்தி ஆஸ்பத்திரி மூடப்படுவது தொடர்பான முடிவினை பின்போடவும், அது தொடர்ந்து இயங்குவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு இருதரப்பு பேச்சுக்களை நடத்துவதற்குத் தேவையான ஒழுங்குகளையும் செய்து விட்டுத்திரும்பியுள்ளது.

இன்று நடைபெறுவதாகவுள்ள இப்பேச்சுக்கள் சுமுகமானமுறையில் நடந்து நல்லதொரு முடிவுக்கு வழி செய்யும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

இப்பிரதேசத்தில் மீண்டும் சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டவும், இப்பிரதேச மக்களைத் தம்வசப்படுத்தவும், இலங்கை அரசு தன் ஆயுதப்படைகளை பயன்படுத்திவரும் அதேவேளையில் இப்பிரதேசத்தை மீட்கவும், மக்களைப் பாதுகாக்கவும் போராளிகள் கங்கணம்கட்டி நிற்கின்றார்கள். எனவே இப்பிரதேசங்களின் பொதுச் சொத்தான போதனா வைத்தியசாலையைப் பாதுகாத்துப் பராமரிக்கும் பொறுப்பு இருதரப்புக்கும் உரியதே.

இதில் தவறிழைக்கிறவர்கள் யார் என்பதை இங்குள்ள மக்களைத் தவிர வேறு எவருமே அறியமுடியாது. கொழும்பி வெளியாகும் செய்திகள் பெரும்பாலும் உண்மைக்கு மாறானவையாகவே உள்ளன.

ஆஸ்பத்திரியை அரசு மூடினால் நோயாளிகளுடன் சேர்த்து வெடிவைத்துத் தகர்த்துவிடுவதற்கு போராளிகள் முடிவுசெய்திருக்கிறார்கள் என சிங்களப் பத்திரிகையொன்று அண்மையில் முதல்பக்கத் தலைப்புச் செய்தியொன்றை பிரசுரித்திருந்தது. இப்படியான செய்திகள் எவருக்கும் பயனளிக்கமாட்டாது.

ஆஸ்பத்திரியின் வெறும் கட்டிடத்தையும் கூட தகர்த்துவிடும் நோக்கம் எவருக்கும் இருக்கமுடியாது. அந்த அளவுக்கு அதன் அருமையும் பெருமையும் இங்கு உணரப்பட்டுள்ளது.

எனவே இன்று நடைபெறும் ஆலோசனைகள் பயனுள்ளவையாக அமைய வேண்டும் எனபிரார்த்திக்கின்றோம். இதனால் ஆஸ்பத்திரி இங்கேயே தனது பணியைத்தொடரவும், மக்கள் அச்சமின்றியும் ஆபத்தின்றியும் சிகிச்சைகளைப் பெறவும் வழிபிறக்கவேண்டும்.

# இருளில் மூழ்கினால் துப்பாக்கிச்சூடு

பலாலி, ஞாயிறு

கட்டுவன் மினி இராணுவ முகாம் இருளில் மூழ்கும் பாதெல்லாம் முகாமை சுற்றி நாலாபுறங்களில் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கடுப்பகின்றன.

கடந்த சில மாதங்களுக்கு முன் புதிதாக அமைக்கப்பட்ட இந்த மினி முகாமிற்கு 'மின்சார' வசதியில்லை. தமது மின் தேவையை 'ஜெனரேற்றர்' மூலமே பூர்த்திசெய்து வருகிறார்கள்.

'ஜெனரேற்றர்' திடீரென நின்று முகாம் இருளில் மூழ்கினால் ஒளி கிடைக்கும்வரை துப்பாக்கிவேட்டுகள் நாலாபுறங்களிலும் தீர்க்கப்படுகின்றன. (சி)

## இராணுவத்தினரால் கைதான

# வசாவிளான் வாசியின் பயங்கர அனுபவம்

பலாலி, ஞாயிறு

வசாவிளான் மினிஇராணுவ முகாமுக்கு அண்மையில் வீடொன்றில்வைத்து இராணுவத்தால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் பலத்த காயங்களுடன் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் கைது செய்யப்பட்டு 3 நாட்கள் முகாமில் வைத்து சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட பின் விடுவிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அந்நபர் தனதுபயங்கரஅனுபவம் பற்றித் தெரிவித்ததாவது;

வசாவிளானில் எனது வீட்டில் இருக்கும்போது பல இராணுவத்தினர் பற்றை செடிகளுக்குள்ளால் பதுங்கிப் பதுங்கிவந்தனர். அச்சமயம் நான் எனது வீட்டில் இருந்தேன். எனது வீட்டுக்குள் புகுந்தவர்கள் ஏன நீ இங்கு இருக்கிறாய் எனக் கேட்டு என்னைக் கைது செய்தனர் எனது வீட்டைச் சோதனையிட்ட இராணுவத்தினர் அங்கு காணப்பட்ட கார் பற்றறி ஒன்றை பார்த்துவிட்டு ஏன் இதை இங்கு வைத்திருக்கிறாய் எனக் கேட்டு அதைத் தோளில் சுமந்து கொண்டு தம்முடன் வரும்படி பணித்தனர்.

என்னைக் கைது செய்து கொண்டு சென்ற ராணுவத்தினர் பற்றறியுடன் என்னை ராணுவ உயர் அதிகாரி முன் நிறுத்தி இவர் ஒருபுலி எனவும் தங்களுக்கு கண்ணிவெடி வைப்பதற்கு வயர் பற்றறி வைத்து தயார் படுத்திக கொண்டிருந்தார் எனவும் கூறினர். உடனே அவர் சிங்களத்தில் ஏதோகூற 3 அடி நீள அகலமான அறையொன்றுக்குள் என்னைக் கொண்டுபோய்விட்டார்கள்.

அதற்குள் எதுவும் தெரியவில்லை மூச்செடுக்க முடியாதிருந்தது. ஒரு மணித்தியாலத்தின்பின்அறையைத் திறந்தார்கள் புலிகள் எங்கேயிருக்கிறார்கள்? நீ புலியா எனப் பல தடவைகேட்டு மண் அடைத்த எஸ்லோன் குழாய்களால் அடித்தார்கள்.

நான் புலி இல்லையெனக் கூற பற்றறியை ஏன் வைத்திருந்தாய் எனக்கேட்டனர். றேடியோ பாட எனக்கூற அதற்கும் அடித்தார்கள் பின்னர் ஓர் மோட்டர் கொண்டு வந்து 2 அடி நீளமான ஏதோ ஒரு பொருளை எனது இரு தோள் மூட்டிலும் பிடித்தார்கள் எனக்கு எதுவும் தெரியாது நிலத்தில் விழுந்தேன்.

சிறிதுநேரத்தின் பின் நான் எழும்பிப் பார்த்தபோது மீண்டும் 3 அடி நீள அகலமான அறையில் குந்திக்கொண்டு இருப்பதைக் தெரிந்துகொண்டேன். மறுநா மாலை எனது அக்காவும் அத்தானும் வந்து இராணுவ அதிகாரிகளிடம் என்னைப் பற்றி விசாரித்தனர் அச்சமயம் எனது அக்காவை இராணுவத்தினர் தாக்கி, விரட்டி அடித்தனர்.

அந்நேரம் நான் இறப்பது இங்குதான் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. பீதியினால் எனக்கு நித்திரை வரவில்லை இரவு முழுவதும் விழித்தபடி இருந்தேன்

மறுநாள் காலை அறையிலிருந்து கூட்டிச்சென்ற இராணுவத்தினர் என்னை பலாலி இராணுவ முகாம் அதிகாரி ஒருவர் முன் நிறுத்தினர். முகாமுக்கு வெளியே நின்ற அக்காவைக் கூப்பிட்ட அதிகாரி என்னை அவருடன் போகும்படி பணித்தார்.

இன்று நினைவுநாள்

## மலையகத்தில்

# மண்காக்க உயிர்நீத்த சிவனு லட்சுமணன்

1977 மே மாதம் 11-ந் திகதி மலையக மக்களின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை தினமாகும். பதினைந்து தசாப்தங்களுக்கு முன் தென்னிந்தியாவில் இருந்து ஏமாற்றிக் கண்டிச் சீமைக்கு வரவழைக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்கன் அடிமைகளாக, அனாதைகளாக தம் வியர்வை சிந்தி சாடழித்து களனிசெய்த மண்ணை மாற்றானுக்குத் தாரை வார்க்கும் திட்டத்திற்கு முற்றுர்புள்ளி வைக்க முனைந்த நாளே அதுவாகும்.

ஆங்கிலேயரால் இங்கு கொண்டு வரப்பட்டகாலம் முதல் தமது உழைப்பைச் சுரண்டலாளருக்கு மலிவாக விற்று மீட்சியிலா வறுமைப் பிடியில் சிக்கி நாட்டின் வளர்ச்சிக்கு உழைத்து, உழைத்துத் தங்கள் உடலையே இந்த மண்ணுக்கு உரமாக்கி வரும் தொழிலாளர்களின் வழித்தோன்றல் சிவனு லட்சுமணன் ஆவார்.

டெல்டா தோட்டத்தில் ஒரு தொழிலாளியின் மகனாக பிறந்த சிவனுலெட்சுமணன் தனது வாலிபகாலத்தில் தனது சமூகத்தில் அக்கறை கொண்ட முற்போக்காளனாக திகழ்ந்தான். மலையக மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளைக் கண்டு சினம்கொண்டான் அடிமை வாழ்வை வெறுத்த இவன் மண்ணையும் மக்களையும் பேச்சளவில் மட்டுமின்றி செயலிலும் நேசித்துக் காட்டியவன். மலையக மக்களின் உடமைக்கான உரிமைப் பேரராட்டம் நடத்திவரும் போராட்ட களத்தில் வீரமரணம் எய்திய தோழர்கள் பிரான்ஸ், ஐயாவு, கோவிந்தன் ஆகியோரின் வழியில் சென்று குடியேற்ற வாதிகளை விரட்டி அடித்தவன்.

மலையகத்தில் தேசிய மயமாக்கும் நடவடிக்கைகள் 1977-ல் டெவன்-சங்குவாரித் தோட்டங்களில் அரசு நடைமுறைப்படுத்த எத்தனித்தபோது மலையக மக்களின் வேலைநிறுத்தப் போராட்டம் அரசின் எண்ணத்தைப் பின்வாங்கச் செய்துவிட்டது. ஆனால் சங்குவார் டெல்டா தோட்டத்தில் மீண்டும் பேரினக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட இருந்ததை அறிந்த சிவனு லட்சுமணன் அதைத் தடுத்து நிறுத்தித் தொழிலாளருடன் சேர்ந்து போராடினார். ஆனால் ஆட்சியாளர்கள் டெவன் தோட்டத்தில் காணி பகிர்ந்தளிக்கும் முயற்சியைத் தீவிரப்படுத்தினர்.

குடியேற்ற திட்டத்திற்கு எதிராக தொழிலாளர்கள் ஆர்த்தெழுந்தனர் காணி அளவையாளர்கள் எவரையுமே தோட்டத்தின் உள்ளே வரவிடாமல் தடுத்தனர். பொலிஸார் வரவழைக்கப்பட்டு தொழிலாளர்கள் எச்சரிக்கப்பட்டார்கள். துப்பாக்கி குண்டுகள் தலைக்கு மேலால் விரைந்து சென்ற ரவைகளும் தொழிலாளர்களை பின்வாங்கச் செய்யவில்லை, வெறிகொண்ட துப்பாக்கிகளால் திரண்டுவரும் மக்கள் கூட்டத்தை நோக்கி சுடப்போவதாக எச்சரித்தார்கள் சினங் கொண்ட வேங்கையென சீறினான் சிவனு லெட்சுமணன் 'சுடு என்னைச்சுடு' என கர்ச்சித்தான். இந்த மண்ணின் வளத்துக்கு என்னைப் போன்றவர்களின் உடல்கள் தான் உரமாகி இருக்கிறது. குருதியையும், வியர்வையையும் கொட்டி பெரும்காடுகளை அழித்து தேயிலைக்காடாக செய்வதற்கு என் மூதாதையரின் உடல்களை புதைத்து தேயிலைக்கு உரமூட்டி, சுவையூட்டிய நீங்கள் என்னைச் சுடுங்கள் என நெஞ்சை நிறுத்தி முன் சென்றான் அவன் பரந்த மார்பில் பொலிசாரின் துப்பாக்கிக்குண்டுகள் பாய்ந்து சென்றன. அவன் நேசித்த மண்ணில் அவன் குருதி கோலமிட்டது அவன் தன் இன்னுயிரை மண்ணுக்கு ஈந்துவிட்டான். மலையகமெங்கும் அவன் நாமம் ஓங்கி ஒலித்தது.

ஜி.எம்.பரஞ்சோதி.

# கடற்றொழிலாளர் இருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

தலைமன்னார் பியர் கடற்பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற இரு கடற்றொழிலாளர்களை கடந்த மாதம் 23ம் திகதி தொடக்கம் காணவில்லையென்றும் இவர்கள் சென்ற 'பரகத்' என்ற மீன்பிடி படகுக்கு என்ன நேர்ந்ததென்று தெரியாதுள்ளதாகவும் அவர்களின் உறவினர்கள் பெரும் அச்சம் தெரிவித்துள்ளனர்.

சம்பவதினம் மாலை கடற்றொழிலுக்காக சென்ற எம். ராஜா, வி. செல்வம் ஆகிய இரு இளைஞர்களுமே கடற்றொழிலுக்குச் சென்று இதுவரையும் வீடுதிரும்பாதவர்களாவர். (எ)

## மூதூர் சம்பவம்:


# பிரஜைகள்குழு புகார்

[திருமலை நிருபர்]

மூதூர் பட்டித்திடலில் இராணுவத்தினரால் 19 அப்பாவித் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு சுமார் 100 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக திருமலை பிரஜைகள் குழுவினர் இணைப்பதிகாரிக்கு புகார் செய்துள்ளனர்.

இச்சம்பவத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் விபரம் வருமாறு;

நல்லையா பாலிப்போடி [60] தம்பிப்பிள்ளை சீனித்தம்பி [55], எஸ். செல்லத்துரை[5_] திருமதி கொ. பொன்னம்மா [55], அவரின் மகள் கொ. மேரி [26], திருமதி சின்னத்தம்பி செந்திமலர் (4 ] கோகுலேஸ்வரி [ 4], பாலமுருகன் [11] யோகராசா [10], உலகநாதன் யோகேஸ்வரி [26]. அவரின் பிள்ளைகள் ஜெயப்பிரியா [5], ஜெயரதி [8 மாதம்], கே. எஸ். பத்தினாதன் [ 2], சீதையம்மா (33], நேசன் [16]. பிரகாஷ் [13]. சோபனா [12 ,அற்புதராசா [10] கிருஷ்ணசாந்தி [7]



புலோலியில் அண்மையில் பொம்பர் தாக்குதலில் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை (மந்திகை) பலத்தசேதத்திற்குள்ளானது. சேதத்திற்குள்ளான பாடசாலைக்கட்டிடங்களையே படத்தில் காண்கிறீர்கள். (படம்: பருத்தித்துறை நிருபர்)

## சீனாவில் காட்டுத்தீ: 114 பேர் மரணம்; 90 பேர் காயம்

# 12,000வீடுகள் முற்றாக எரிந்து நாசம்

## 50,000 மக்கள் அகதிகள்

பீக்கிங், மே. 10

சீனாவின் வடகிழக்கு எல்லைப் பிரதேசத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயினால் நூற்றிப் பதினாலு பேர் கொல்லப்பட்டனர். தொண்ணூறுபேர் காயமடைந்துள்ளனர், பல வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதுடன்ஆயிரக்கணக்கான மக்கள்தமது இருப்பிடங்களைவிட்டு அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

சுமார் நூறு கிலோ மீற்றர் தூரத்திற்கு இக்காட்டுத்தீ பரவியுள்ளது இதனைக்கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக ஆறுயிரம் இராணுவ வீரர்களும், தீயணைப்புப்படையினரும் தீயணைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

காட்டுத்தீ பரவியுள்ள பகுதிகளில் பலத்த காற்று வீசுவதால் தீயணைப்பு பணிகளை சீரானமுறையில்மேற்கொள்ள முடியாதிருப்பதாக தீயணைப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ள இராணுவவீரர் ஒருவர் தெரிவித்தார்.

திடீரெனப் பரவிய இக்காட்டுத் தீயினால் சுமார் பன்னிரண்டாயிரம் வீடுகள் முற்றாக எரிந்துள்ளன ஐம்பதினாயிரம் மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

இத்தீவிபத்தினால் ஏற்பட்டுள்ள சேதவிபரம் பற்றி இது வரை கணக்கிடப்படவில்லை.


# மேர்ச்சன்ட் பினான்ஸ்

## லிமிட்டெட்

**555, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோவில் மேற்கு வீதியடி)**

**யாழ்ப்பாணம்.**

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 02-05-1979

நிலையான வைப்புத்திட்டங்கள் 01-05-1987 தொடக்கம்

வருட வட்டி விகிதம்

| காலம் | வட்டி% | ஊக்குவிப்பு போனஸ்% | மொத்த வட்டி ஊக்குவிப்பு% போனசுடன் |
|---|---|---|---|
| 6 மாத வைப்பு | 9 | — | 9 |
| 1 வருட வைப்பு | | | |
| மாதாந்த வட்டி | 14 | 2 | 16 |
| காலமுடிவில் வட்டி | 14 | 4 | 18 |
| 2 வருட வைப்பு | | | |
| மாதாந்த வட்டி | 14 | 4 | 18 |
| காலமுடிவில் வட்டி | 14 | 6 | 20 |

பிரதான தொழில் வகைகள்

★ வியாபாரப் பொருட்களின் பொறுப்பில் கடன்வழங்கல்.

★ வர்த்தக வாகனங்கள் உழவு யந்திரங்கள் முதலியனவற்றுக்கு வாடகைக் கொள்வனவிற்கு கடன் வழங்கல் முதலியன.

நிதி நிலைமை

| | 31-3-1984இல் முடிந்த வருடத்திற்கு | 31-3-1985இல் முடிந்த வருடத்திற்கு | 31-3-1986ல் முடிந்த வருடத்திற்கு |
|---|---|---|---|
| | ரூ. ,000 | ரூ. ,000 | ரூ. ,000 |
| பங்கு மூலதனம் | 100, | 100, | 100, |
| ஒதுக்கிய நிதி | 1010, | 1085, | 1085, |
| நிலையான கடன் முறிகள் | 597, | 597, | 597, |
| வைப்புகள் | 12401, | 14268, | 12753, |
| பெற்றகடன்கள் | — | — | — |
| வரிக்குமுன் லாபம் | 1131, | 514, | [170] |
| வரிக்குப்பின் லாபம் | 481, | 139, | [170] |
| வழங்கப்பட்ட பங்கு லாப வீதம் | 30, | 30, | Nil |

இயக்குநர் சபை

A. சோமசுந்தரம்பிள்ளை, B. A., F. C. A. தலைவர், முகாமைத்துவ இயக்குநர்.
K. நடராசா, B Sc (Econ), Bar-at-Law, Attorney-at-Law.
C. மகேசன், Attorney-at-Law.
S. மகேந்திரா, B. Sc (Cey) இயக்குநர் கடன் வசதிகள்.
S. சிவஞானம், Retd. S. L. A. S.

[எ3964]


## 'வீரகேசரி' துணை ஆசிரியர் கைது!

சென்னை, மே 9

கொழும்பிலிருந்து வெளியாகும் தமிழ்த்தினசரியான 'வீரகேசரி'யின் துணை ஆசிரியர் நேற்று இலங்கைப்பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாக சென்னையில் தமிழர் தகவல் மையம் செய்தி வெளியிட்டுள்ளது.

வீரகேசரி துணை ஆசிரியருடன் வேறு 12 பேரும் கைது செய்யப்பட்டதாகவும் இவர்களனைவரும் வல்வெட்டித்துறையில் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தகவல் மையம் மேலும் தெரிவித்துள்ளது. (ஊ)

## ரதோற்சவம்

(பண்டத்தரிப்பு நிருபர்)

பிரசித்திபெற்ற மாதகல் நுணசை முருகமூர்த்திஆலய ரதோற்சவம் நாளை 12ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. தீர்த்தோற்சவம் மறுநாள் நடைபெறும்.

## 'பரா லைற்' உதவியுடன் ஷெல் தாக்குதல்

பலாலி, ஞாயிறு

பலாலி இராணுவமுகாமிலிருந்து கடந்தசில நாட்களாக நள்ளிரவு நேரத்தில் 'பரா-லைற்' வெளிச்சத்தின் உதவியுடன்டன் 5-6 மைல்களுக்கு அப்பாலும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுகிறது.

## இன்றைய பலன்

மாதம்: சித்திரை
திகதி: 28 (1987-05-11)
கிழமை: திங்கள்
திதி: திரயோதசி மு. இ. வரை
நட்சத்திரம்: சித்திரை பி.இ.வரை

மேடம்: முக்கியமான விடயங்களை இன்று பின்போடவும். உள் வீட்டிலேயே உளவு வேலை நடைபெறலாம். உஷாராக இருக்கவும்.

இடபம்: தந்தைவழிப் பெருமைக்கும் தாராள இடமுண்டு. நீண்ட நாள் கனவு இன்று நனவாகும். பெரியவர்களின் ஆதரவும் உண்டு.

மிதுனம்: விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும். நீண்ட நாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும்.சுபநாள்.

கடகம்: சிலருக்குப் புதிதாகத் தொழில் கிடைக்கும். சகோதர பாசம் தலைதூக்கும். கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு.

சிங்கம்: தொழில் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் நண்பர்களின் சகவாசத்தால் சிக்கல்களின் மத்தியில் மாட்டிக் கொள்ள நேரிடும்.

கன்னி: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள். வாழ்க்கையில் சோர்வுக்கும் இடமுண்டு. உடல் நலத்தைப் பேணவும்.

துலாம்: உடம்பை அலட்டிக் கொள்ளாமலேயே உயர்வுக்கு வழிகாண்பீர்கள். மேலிடத்து உறவு உற்சாகத்தையளிக்கும். சினேக வழிச் சுகமும் உண்டு.

விருச்சிகம்: போட்டி விவகாரங்களில் ஈடுபடுவீர்கள். சிலருக்குப் புதிதாகவும் தொழில் கிடைக்கும். பொதுசன ஆதரவும் உண்டு.

தனுசு: மாதுரு வழி ஆதரவிற்கு இடமுண்டு நண்பர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள். புதிய முயற்சிகள் இன்று கைகூடும்

மகரம்: புத்திர வழிச் சிறப்பும் இனசன மகிழ்ச்சியுமுண்டு. தொழிலிலும் வெற்றியுண்டு. வீட்டிலும் மகிழ்ச்சி நிலவும்.

கும்பம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத வகையில் சிக்கலில் மாட்டிக்கொள்ள நேரிடும். அவதானம் வேண்டும்.

மீனம்: களஸ்திர வழிச் சிறப்பும் பெரியோர் உதவியும் உண்டு. இன்று தொழிலிலும் சிறப்புண்டு.

**திருமலை ரவீந்திரன்**

## சீனி கொள்வனவு கேள்வி கோரல்

மேற்படி எமது சங்கத்தால் மாதாந்தம் 20000 கிலோ சீனி கொள்வனவு செய்வதற்கு தனியார் இறக்குமதியாளர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. தங்களது மொத்த நிலையத்தில் வைத்து விநியோகம் செய்யும் விலை (சுத்த நிறையில்)
2. தங்கள் வாகனம் மூலம் சங்கத்திற்கு கொண்டு வந்து விநியோகம் செய்யும்விலை (சுத்தநிறையில்)

என்பவற்றைக் குறிப்பிட்டு உரிய கேள்விகளை 20-05-87க்குமுன் பொதுமுகாமையாளருக்கு அனுப்பிவைக்குமாறுகேட்டுக்கொள்கின்றோம்.

**பொது முகாமையாளர்.**
புலோலி பலநோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

[ஏ 3989]

## பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைக்குமாறு இவர் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து இவர் தமிழீழவிடுதலைப்புலிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கண்டியைச் சேர்ந்த சந்திரசேகரா [19 வயது] என்பவரே புலிகளிடம் சரணடைந்தவராவார். (வா)

## மாணவனின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணவக்கவிற்கு மாணவர் இளைஞர் பொதுமன்ற[கஸ்] தனது அஞ்சலியைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம்மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச தொழிலாளர் தினமான மேதினத்தன்று [1-5-87] நாரஹென்பிட்டியாவில் மேதின ஊர்வலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிசூட்டுச்சம்பவம் அரசின் மற்றுமோர் மிலேச்சத்தனமான நடவடிக்கையை காட்டுகின்றது.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்ட ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த எமது மாணவ நண்பனான கீத்சிறி மேவன்ரணவக்கவிற்கு மாணவ இளைஞர் பொது மன்றம்தனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

மாணவனை ரணவக்க கொலை செய்யப்பட்ட சம்பவமானது இந்நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்கள்மீது மாத்திரமின்றி சமூகத்தின்மீதும் கட்டவிழ்த்து விடப்படும் அரசபயங்கரவாத செயலை எடுத்துக்காட்டுகின்றது.

அத்துடன் இதுவரைகாலமும் தமிழ்பேசும்மக்கள் மீதும் தமிழ்பேசும் மாணவர்மீதும் ஒடுக்குமுறை புரிந்தசிறிலங்கா சோவனிச அரசானது தற்போது சிங்கள தொழிலாளர் மீதும் சிங்கள மாணவர்மீதும் அடக்குமுறை புரியத் தொடங்கியுள்ளது.

மாணவநண்பன் ரணவக்க கொலை செய்யப்பட்டதை மாணவர் இளைஞர்பொது மன்றம் வன்மையாக கண்டிக்கிறது. அதோடுகொழும்பு பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்படும் போராட்டத்தின் உள்ளடக்கமான அரசின் மீதுகொண்டுள்ள அவநம்பிக்கையினை புரிந்து கொள்கின்றது. அந்தவகையில் அவர்களின் போராட்டத்திற்கான எமது ஆதரவைபிரகடனப்படுத்துகின்றோம்'.

## வீட்டுப் பெண் உதவியாளர் உடன் தேவை

(WANTED DOMESTIC HELPERS TO SINGAPORE)

ஆங்கிலம், மலாய் பாஷைகள் பேச்சுப் பயிற்சி தொடங்கிவிட்டது. கிறீஸ், கனடா செல்லவும் சந்தர்ப்பம் உண்டு. கீழ்க்கண்ட விலாசத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்:

க. பொன்னுத்துரை, (ஆசிரியர்)
நம். 3, கைலாசபிள்ளையார் வீதி,
நாவலர் றோட், யாழ்ப்பாணம்

(சி-9014)

## இடமாற்றம்
## A/L விஞ்ஞான மாணவர் கவனத்திற்கு

195, 3ம் குறுக்குத் தெருவில் நடைபெற்ற சகல விஞ்ஞான வகுப்புகளும், பாதுகாப்புக்கருதி பலாலி வீதி, பழம் வீதி சந்தியிலுள்ள மணல்தரை வீதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. 11-05-87ல் இருந்து சகல வகுப்புகளும் வழமைபோல் நடைபெறும். மற்றுமோர் கிளை சுண்டிக்குளி சுற்றுடலில் மிகவிரைவில் அமையும்.

(சி 9016) ஆசிரியர்: **நாகரட்ணம்**

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு/6178 இலக்க வழக்கில் வாதி தெல்லிப்பழை கிழக்கு பஞ்சாட்சரம் மகள் கமலாசினிக்கு விற்பனவு திகதி வரை போகவேண்டிய தீர்வைத்தொகை 61000-/ ரூபாவும் மேலும் இதில் 50 000/- ரூபாவுக்கு 15-6-1985 தொடக்கம் 1-10-1986 வரைக்கும் வருடமொன்றுக்கு 12 %வீத வட்டியும் வழக்குச்செலவு 6310ரூபா20சதமும் விற்பனவுச் சலார்களும் இத்தொகையைப் பிரதிவாதிகளாகிய யாழ்ப்பாணம் 76. ஆஸ்பத்திரி வீதி இராசரத்தினம் சுந்தரமூர்த்தியிடமும் பெண் கமலாம்பாளிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1987 ஆம் யூன் மீ 3ந் உ (3-6-1987) முற்பகல் பத்து மணி தொடக்கம் குறித்த இவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### குறித்த ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பகுதியும் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை "மூத்தையினன் வளவு கடையடித்திடல் சீமந்திடல் திருவளத்திடல்" நெற்பரப்பு (23) இருபத்திமூன்று. இதில் நடுப்புறமாக 18-5 1983ல் நில அளவையாளர் எம். நவரத்தனத்தால் தயாரிக்கப்பட்ட 773ம் இலக்கப்படத்தில் 3ம் துண்டாகக் காட்டப்பட்ட நெற்பரப்பு (3) மூன்றும் இதற்கு எல்லை கிழக்கு இராசரத்தினம் சிவகுமாரனினுதனம் வடக்கு குறித்த படத்தில் 2ம் துண்டுக் காணி மேற்கு 1ம் துண்டாக காட்டப்பட்ட பாதையும் ஈடு கொடுக்கற்காரரினுதனமும் தெற்கு ஈடு கொடுக்காரரினுதனம் இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்,

643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9012)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



**நல்லதம்பி சக்திவேல் (சிலுப்பி)**

ஆண்டவன் படைப்பு: 26-03-1955
ஆள்பவன் பறிப்பு: 28-03-1997
திதி: 11-05-1987

அன்பு மகனே ஆசைச் செல்வமே 45 நாளாகி விட்டதடா! சக்தி (சிலுப்பி) என்றால் அனைத்து உலகமும் கேட்குமெனக் கனவு கண்டேனடா! அந்தக் கனவு எல்லாம் வீணாகி விட்டதடா!!

துவண்டு துடிக்கும், மனைவி: ரேணுகா, பிள்ளைகள்: சந்திரு, நிருபன், தாய்: நல்லதம்பி அன்னக்கண்டு, சகோதரங்கள்: தங்கரத்தினம், ரத்தினவேல், தங்கவேல், நேசரத்தினம்.ஆனந்தவேல் மற்றும் உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறோம்.

துவாளி வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி.
(சி 9024)

## லிடோ யாழ். நகர்

10-30, 2-30, 6-30

சிவகுமார் -சுஹாஷினி நடித்த

### சிந்து பைரவி

1986ம் ஆண்டு இந்திய ஜனாதிபதியின் சிறந்தவிருதைப்பெற்ற படம் சங்கீத இசைப்பிரியர்களுக்கோர் சிறந்த வரப்பிரசாதம்.

[புதிய வெளியீடு கலர்]

புதிய வெளியீடு

## வெலிங்டன் திரையில்

10-30, 2-30, 4-30, 6-30

நவீனரக ஆயுதங்களுடன் பயங்கர சண்டைகள் நிறைந்தது.

Anthony Quinn - James Corburn
Lindsay Wagner in
HIGH RISK
(Colour)

## 25 பிதவைப்

[1-ம் பக்கத் தொடர்ச்சி

நிதியம்-83' வழங்கவுள்ளது.

மற்றும் எட்டுப்பெண்களுக்கு வியாபாரம் செய்யப் பண உதவியும், இரு பெண்களுக்கு மீன்பிடி உபகரணங்களும், ஆறு பெண்களுக்கு நீர் இறைக்கும் யந்திரங்களும், ஒருவருக்கு மாட்டுவண்டியும் வழங்கப்படவுள்ளன

யாழ் கச்சேரியடியிலுள்ள வை. எம். சி ஏ கட்டிடத்தில் நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தில் யாழ். மாநகரசபை ஆணையாளர் கலந்துகொண்டு இந்த நிவாரணப் பொருட்களை வழங்குவார். (வா)

## பாதுகாப்பு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்நோக்கவேண்டியிருக்குமென இந்த நிறுவன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கான உதவியை வழங்குவதற்கான சூழ்நிலைகளை ஆராயும்பொருட்டு இவ்விரு நிறுவனங்களின் உயர்மட்ட அதிகாரிகள்குழு ஒன்று அடுத்தவாரமளவில் இலங்கை வரவுள்ளது.

இலங்கையில் அரச அதிகாரிகளுடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ள இவர்கள் பாதுகாப்புச் செலவினங்களில் அதிகரிப்புப்பற்றியும் இதனால் வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறை நிதிஅளவை இலங்கை அரசினால் கட்டுப்படுத்தமுடியுமா என்பதுபற்றியும் இலங்கை அதிகாரிகளிடம் சந்தேகமெழுப்புவர் எனவும் இவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

இதேவேளை இவ்விரு நிறுவனங்களின் உதவிகள்குறைக்கப்படுமானால் இலங்கை தனது தாராள பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டியிருக்குமெனவும் அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் பாதிக்கப்படுவரென்றும் இலங்கையில் நிதி திட்டமிடல் அமைச்சு அதிகாரிகள் கூறியுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. [ஊ]

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பு



**திரு கணபதிப்பிள்ளை செல்லையா**

[மலாயன் பென்சனியர்]
மலர்வு: 11-10-1907
உதிர்வு: 12-04-1987

அக்ஷயவருட பங்குனி மீ 28 உ [12-04-87] ஞாயிற்றுக்கிழமை பூர்வபக்க பங்குனி உத்தரத் திதி கூடிய புண்ணிய தினத்தில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகளும் வீட்டுக் கிருத்தியமும் 12-05-87 செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

மேற்படி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செல்லையா குடும்பத்தினர்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

சி-9027

## வருடாந்த உற்சவம்

(பண்டத்தரிப்பு நிருபர்)

பெரியவிளான் விக்கினேஸ்வர ஆலய இரதோற்சவம் நாளை 12ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று நடைபெறவுள்ளது. தீர்த்தோற்சவம் புதன்கிழமையன்று பகல் 10மணிக்கு நடைபெறும் வியாழக்கிழமையன்று பூங்காவன உற்சவம் நடைபெறும்.

## அலுவலகம் இடமாற்றம்

(பண்டத்தரிப்பு நிருபர்)

யாழ். தாதிகள் பயிற்சிப் பாடசாலைக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கிவந்தயாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் இவ்வாரம் தொடக்கம் இணுவில் தனியார் வைத்தியசாலையிலுள்ள கட்டிடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**காயமடைந்தவர் மரணம்**

யாழ்ப்பாணம், திங்

அச்சுவேலியில் இடம்பெற்ற ஹெலி தாக்குதலின்போது படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நாவலப்பிட்டியைச் சேர்ந்த பாலு (வயது 30) என்பவர் நேற்றுமுன்தினம் ஆஸ்பத்திரியில் மரணமானார்,

## போர்தவிர்ப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகள் குழுக்கள் போர் தவிர்ப்புப் பிராந்தியம்குறித்து முடிவு எடுப்பதற்கான கால அவகாசத்தை வழங்கியுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.

## தொடர்ந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கான மாணவ, மாணவிகள் பரீட்சைக்குத்தயாராக வேண்டிய நிலையில் உள்ளனர். இந் நிலையில் இவர்களது எதிர்காலக் கல்விகுறித்து விரைந்து தீர்மானிக்கும் வகையிலேயே கல்விப்பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பணிப்பாளர்மன்சூர்மேலும் தெரிவித்திருப்பதாவது:-மேற்படி இரு பாடசாலைகளின் அதிபர்களும் தத்தமது பாடசாலை அபிவிருத்திச்சங்கங்களை அழைத்து தொடர்ந்து இவற்றை நடத்துவது பற்றி ஆராய வேண்டும்.

அத்துடன் இப்பாடசாலைகளை நடத்துவதற்கான மாற்றுத் திட்டங்கள் குறித்தும் பரிசீலித்து கூடியவிரைவில் இவற்றின் மாணவ மாணவிகளின் கல்வியைத் தொடர ஆவண செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இப்பாடசாலைகளின் அதிபர்களுக்கும் தாம் பணிப்புரைகளை வழங்கவிருப்பதாகவும் அவர் கூறினர்.

இவ்விருகல்லூரிகளும் இராணுவத்தாக்குதல்களால் அடிக்கடி சேதமாவதும் இங்குமாணவர்கள் ஆசிரியர்கள் அச்சத்துடன் இருந்துவருவதும்குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ப்போராளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டனிலுள்ள இந்தியத் தூதரகம் மறுத்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்று அந்த நாளேட்டிற்கு இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் இனப்பிரச்னை ஏற்பட்டதால் இப்பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண பேச்சுவார்த்தைகளில் உதவிடதனது நல்லெண்ண முயற்சிகளை இந்தியா அளித்திருக்கிறது என்று தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

இப்பிரச்னைக்குஅமைதியான தீர்வு ஒன்றையே இந்தியா விரும்புகிறது'' என்று வாஷிங்டன் போஸ்ட் நாளிதழுக்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்க கிழமை 11-5-87

## இராணுவ நடவடிக்கை விஸ்தரிப்பு:- கட்டுவன், வசாவிளான், குரும்பசிட்டிப் பகுதியில் ரூ.38லட்சம் பயிர்ச் செய்கை நஷ்டம்!

யாழ்ப்பாணம், திங்கள்

கட்டுவன் வசாவிளான், குரும்பசிட்டிப் பகுதிகளில் இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கைகள் காரணமாகப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு 38 லட்சத்து 80 ஆயிரம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் விவசாய உற்பத்திகளை அறுவடை செய்யமுடியாதுள்ளமையாலும், தகுந்த பராமரிப்பின்மையால் பயிர் வகைகளில் பல அழிந்துள்ளமையாலுமே இந்த நஷ்டமேற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபரிடம் இந்த நஷ்டத்துக்கான நிவாரணம் கோரும் மகஜரொன்றை மயிலிட்டி தெற்கு பிரஜைகள் குழு சமர்ப்பிததுள்ளது. அம்மகஜரிலேயே இந்த நஷ்டஈடு விபரங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் சிறந்த மண்வளம், நீர்வளம் மிக்கது எனக் கருதப்படும் சட்டுவன், வசாவிளான், குரும்பசிட்டி ஆகிய பகுதிகளில் புகையிலை, வாழை ஆகியவற்றுடன் உப உணவுப் பயிர்களான வெங்காயம், மிளகாய். பீற்றூட், கரட் போன்றவைகளும் செய்கை பண்ணப்பட்டு வந்தன

கடந்த பெப்ரவரி, மார்ச் மாத இறுதிப்பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினுல் அங்குள்ள மக்கள் தம் வீடு வாசல்களையும் விவசாய நிலங்களைப் பயிருடனும் விட்டுவிட்டு இடம்பெயர்ந்து வேறிடங்களுக்குச் சென்றுள்ளனர்.

மயிலிட்டி தெற்கு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 250 விவசாயக் குடும்பங்களால் 194 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டு வந்தது.

இராணுவ நடவடிக்கைகளினுல் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் தங்களது விவசாயப் பொருட்களை அறுவடை செய்யமுடியாது பாரிய நஷ்டமடைந்துள்ளனர்.

எனவே இந்த நஷ்டத்தை ஈடு செய்யும் வகையில் அவர்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வா]

## யாழ். சிறைச்சாலை அதிபர் இடமாற்றம்

யாழ்ப்பாணம் திங்கள்

யாழ். சிறைச்சாலை அதிபர் ச. சத்தியமூர்த்தி பதவியுயர்வு பெற்று கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களாக யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர் இம்மாதம் 1ம் திகதி முதல் பதவியுயர்வுடன் இடமாற்றலாகியுள்ளார். [ஒ]

## விபரம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், திங்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் 'பொம்மர்' விமானக் குண்டு வீச்சினுலும் ஷெல் தாக்குதலினுலும் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களிடம் இருந்து யாழ். பிரஜைகள் குழுவினரால் விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்தவர்களின் பெயர், விலாசம், தற்போது இருக்குமிடம், தேவைப்படும் நிவாரணம் போன்ற விபரங்களை இம்மாதம் 15ம் திகதிக்கு முன்பதாக யாழ். மாநகர ஆணையாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. [வா]

## வேல் ஆனந்தன் குழு லண்டன் செல்கின்றது

யாழ்ப்பாணம், திங்கள்

கலைஞர் வேல் ஆனந்தன் நாட்டியக் குழுவினருக்கு ஐரோப்பிய நாடுகளில் நாட்டிய நிகழ்ச்சி நடாத்துவதற்கு அழைப்புக் கிடைத்துள்ளது.

லண்டன், மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், ரோம், ஆகிய நாடுகளில் உள்ள பல அமைப்புகள் இந்நிகழ்ச்சிக்கான ஒழுங்குகளைச் செய்து வருகின்றன.

வேல் ஆனந்தன் நாட்டிய அமையத்தின் தலைவர், நாட்டியக் குழுவின் முகாமையாளர் யாளர், பக்கவாத்தியக்கலைஞர் உட்பட 20 அங்கத்தவர்கள் இக்குழுவில் இம்முறை இடம்பெறுவர்.

கடந்த யூலை மாதம் வேல் ஆனந்தன் தனது 750-வது மேடை நிகழ்ச்சியைப் பூர்த்தி செய்தவர் என்பதுடன் 82ம ஆண்டு ஐரோப்பிய நாடுகளில் நாட்டிய நிகழ்ச்சிகளை நிகழ்த்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஹெலி தாக்குதலின் போது நீர்வேலியில் பதுங்கு குழிக்குள் ஆண் குழந்தை பிறந்தது

யாழ்ப்பாணம், திங்கள்

ஹெலிகொப்டரிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அஞ்சி பதுங்குகுழிக்குள் பிரவேசித்த இளம் கர்ப்பிணி ஒருவர் ஆண் குழந்தையொன்றை பதுங்கு குழிக்குள்ளே பிரசவித்தார்.

கடந்த சனிக்கிழமை கோப்பாய் பகுதியில் ஹெலியிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த சத்தம் கேட்டு நீர்வேலி மத்தியில் வசிக்கும் இளம் கர்ப்பிணியான திருமதி ந கனகம்மா (20 வயது) வீட்டிலிருந்த பதுங்கு குழியொன்றில் பிரவேசித்தார்.

ஹெலிகொப்டர் தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததால் ஒரு மணித்தியாலம் வரை பதுங்கு குழிக்குள் இருந்த இவர் பதுங்கு குளிக்குள்ளே அழகான ஆண் குழந்தையொன்றை பிரசவித்தார்.

அண்மையில் அச்சுவேலிப்பத்தைமேனிப் பகுதியிலும் பதுங்கு குழிக்குள் தஞ்சம் புகுந்த கர்ப்பிணி குழந்தையொன்றை பிரசவித்தது தெரிந்ததே. (ஒ)

## அச்சுவேலியில் ஹெலி தாக்குதல்; ஒருவர் பலி, பலர் காயம்

அச்சுவேலி, சனி

அச்சுவேலிப் பகுதியில் நேற்றுப் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஹெலி தாக்குதலில் நாவலப்பிட்டியைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியம் (வயது 3?) ஸ்தலத்தில் பலியானுர் பலர் படுகாயமடைந்தனர். லொறியொன்றும் சிறு சேதத்திற்குள்ளானது.

இச்சம்பவத்தில் அச்சுவேலி தொழிற்பேட்டைச் சந்திக்கு அருகில் வந்த லொறி ஒன்றினை நோக்கி ஹெலி சுட்டதில் லொறியிலிருந்த மல்லாகத்தைச் சேர்ந்த நாகமுத்து பேரானந்தம் (வயது 42), யோசேப் யேசுராசா (வயது-30) ஆகிய இரு லொறித் தொழிலாளிகளும் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து இரண்டு ஹெலி கொப்டர்கள் அச்சுவேலிப் பகுதியில் தொழிற்பேட்டை தோப்பு, நாவற்கிரி, தென்மூலை, பத்தமேனி ஆகிய பகுதிகளை சுற்றி துப்பாக்கி, ஷெல்தாக்குதல்களைமேற்கொண்டனர்.

இத்தாக்குதலின்போது படுகாயமடைந்தவர்களில் தென்மூலையைச்சேர்ந்த ஞானப்பிரகாசம் இம்மானுவேல் (வயது 5?) அந்தோனிப்பிள்ளை ரெமி லுசாந்தரன் (வயது 18) அச்சுவேலியைச் சேர்ந்த யேசுகடாட்சம் சித்திரா தேவரஞ்சித [வயது 30] பாலு (வயது 30) ஆகியோர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [கு]

## காயமடைந்தவர் அனுமதி

யாழ்ப்பாணம், திங்

அச்சுவேலியில் நேற்று முன்தினம் ஹெலிகொப்டர் தாக்குதலின்போது காயமடைந்தவர்களில் ஒருவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜனுப் கே. எம். ஏ. அஸீஸ் (45 வயது) என்பவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (கு)

## காலை 7 மணிக்கு பின்னரே செல்லமுடியும்

புங்குடுதீவு, ஞாயிறு

கிளிநொச்சி முகாம் வீதியூடாகச் செல்கின்ற சகல வாகனங்களும் காலை ஏழு மணிக்குப்பிறகுதான் அவ்வீதியால் செல்லவேண்டுமெனவும் அதற்கு முன்னதாக எந்தவொரு வாகனங்களும் அவ்வீதியால் செல்லக்கூடாதென அம்முகாமிலுள்ள இராணுவத்தினர் கடும் எச்சரிக்கை செய்துவருவதாக தெரியவந்துள்ளது.

## அராலித்துறையில் பீதியுடன் பயணம்

புங்குடுதீவு, ஞாயிறு

அராலித்துறைக் கடலில் பிரயாணங்களை மேற்கொண்டு வரும் பெருந்தொகையான தீவுப்பகுதி மக்கள் எந்நேரமும் ஆகாயத்தைப் பார்த்த வண்ணமும் ஹெலிகாப்டரின் சத்தம் கேட்கின்றதா எனப் பெரும் பதற்றநிலையில் பயணங்களை மேற்கொண்டுவருகின்றுர்கள்.

அண்மையில் அராலித்துறையில் ஒருவர் ஹெலி சூட்டில் கொல்லப்பட்டது தெரிந்ததே,

## நிலைமை மோசமடைகிறது

சென்னை, மே 10

இலங்கையில் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிவருவதாக இலங்கை கிராமிய கைத்தொழிற்துறை அமைச்சர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடையே பேசுகையில் இதனைத் தெரிவித்த அமைச்சர் இலங்கையில் இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் இந்தியாவுக்கும் முக்கிய பொறுப்புண்டு எனத் தெரிவித்தார். இப்பிரச்னைக்கு தீர்வுகாண்பதில் இந்திய உதவிகளைப் பெறுவதில் இலங்கை அரசாங்கம் நாட்டம் கொண்டுள்ளதாகவும், பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண ஜனதிபதி ஜயவர்த்தன ஆர்வமுடையவராகவுள்ளாரென்றும் மேலும் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார். (ஊ)

## கோப்பாயில் ஹெலி தாக்குதல் இளம்பெண்காயம்

யாழ்ப்பாணம், திங்கள்

உரும்பராய், தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் ஹெலிகொப்டரிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

உரும்பராய் சந்தியில் வான் ஒன்று தரித்து நின்றதனை ஆகாயத்தில் வந்த ஹெலிகொப்டரிலிருந்து அவதானித்த படையினர் ஹெலியை தாழப்பதித்து வானை நோக்கி தாக்குதல் நடத்தினுர்கள்

இத்தாக்குதலினுல் உரும்பராய் பகுதியில் இரு வீடுகள் சேதமடைந்தன. சந்தியில் நின்ற வானுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

கோப்பாயில் நடத்தப்பட்ட தாக்குதலினுல் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார். (ஓ)

## மரண அறிவித்தல்

### பரலோகநாதன் பொன்னுச்சாமி

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வ. பி. போ. சபை கிளிநொச்சி சாலையில் கடமையாற்றிய திரு. பொ. பரலோகநாதன் அவர்கள் 8-5-87ல் அகாலமரணமானுர். இவர் திரு. வே. பொன்னுச்சாமியின் அன்பு மகனுமாவார். ஈமைக்கிரியைகள் சில்லாலையில் 9-5-87 சனிக்கிழமை நடைபெற்றது.

(சி-9026) தகவல்: வசந்தகுமார்.

### திருமதி சிங்கராசா பாக்கியம்

திருமதி பாக்கியம்காலமானுர். இவர் காலஞ்சென்ற சிங்கராசாவின்அன்புமனைவியும், அலபோன்சஸ்[சவுதி], லோறன்ஸ் [சவுதி], ஜெகதாஸ் [டென்மார்க்], சகாய மேரி, சந்திரசோதி ஆகியோரின் அன்புத் தாயாரும், பேரின்பநாயகம், கீதபொன்கலன், அம்பிகா, பொலி சிற்ரா ஆகியோரின் அன்புமாமியாரும், அற்புதமேரி, ஞானம்மா, றேசம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்,நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும். இவரது நல்லடக்கம்பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

(சி 9019) தகவல்: வெஸ்லி

### யுவக்கீம் செபமாலைமுத்து

(முத்து) யுவக்கீம் கைம்பெண் செபமாலைமுத்து காலமானுர். இவர், குளமங்கால் புனித பிரான்சிஸ் சவேரியார் கோவில் காலஞ்சென்ற சங்கிலிஸ்தாம் யாக்கோபு மிக்கேல், இசபேல் தம்பதிகளின் தலைமகளும், யாழ். டேவிட் வீதி காலஞ்சென்ற யோண் யுவ கீமின் அன்பு மனைவியும், ஏகபுதல்வன் பாக்கியநாதர் முன்னுள் யாழ் மாநகரசபை எழுது வினைஞர்) இன் அருமைத்தாயாரும், காலஞ்சென்ற மோசேஸ் அடைக்கலம், யாக்கோபு மேரிறேஸ், அருளப்பு அன்னம்மா, சுவாமி ஜே. மைக்கல் சவிரிமுத்து, அ ம. தி. (பளை வண்ணுண்கேணி), அருட் செல்வி பிரான்சிஸ்கா மேரி ஞானதிக்கம் F M.M. (பண்டாரவளை) என்போரின் அன்புச் சகோதரியும், அமலோற்பவத்தின் அன்பு மாமியாரும், மரியெற்ரு யோகராணியின் பேத்தியாரும், அருட்திரு பிரன்சிஸ் யோசேப் (சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர்) இன் பெரியதாயுமாவார். அன்னுரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை 12 - 05 - 87-ல் மாலை 3-30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டபின் புனித பிரான்சிஸ் சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். உற்ருர், உறவினர், நண்பர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். தகவல்: யு. பாக்கியநாதர், குளமங்கால், மல்லாகம்.

சி - 9022

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B /81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu. Telephone: — 22389 24126.